‘இளைய தலைமுறையினரால்தான் மாற்றத்

மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய இளைஞர் தின விழாவில் பரிசு பெற்ற மாணவர்களுடன் (இடமி
மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதி இல.சொ.சத்யமூர்த்தி, சுவாமி கமலாத்மானந்தர், தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன். (

மதுரை, ஜன. 23: இளைய தலைமுறையினரால்தான் மாற்றத்தை உருவாக்க முடியும். நமது தாய்நாட்டில் மனிதர்களை உருவாக்கும் கல்வி வேண்டும் என்று மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதி இல.சொ.சத்தியமூர்த்தி வலியுறுத்தினார்.

மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் தேசிய இளைஞர் தின விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு மடத்தின் தலைவர் சுவாமி கமலாத்மானந்தர் தலைமை வகித்தார். தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன், மதுரை மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதி இல.சொ.சத்திய மூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

விழாவில் மதுரை மாவட்ட குற்றவியல் தலைமை நீதிபதி இல.சொ.சத்தியமூர்த்தி பேசியது:

பாரதத்தில் ஆன்மிக மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் ராமகிருஷ்ணர் என்றால் அதை வளர்த்து விருட்சமாக்கியவர் சுவாமி விவேகானந்தர். பண்டைய காலத்தில் துறவிகள் வேதங்களை திண்ணைக் கல்வி மற்றும் குருகுல முறையில் பயின்றனர். இந்திய துறவிகளில் முதன்முறையாக ஆங்கில முறையில் கல்வி பயின்றவர் சுவாமி விவேகானந்தர் மட்டுமே. ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் ஆற்றல் பெற்றவராகவும் அவர் இருந்தார். அதே போல கடல் கடந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று இந்திய ஆன்மிகத்துக்கு மேலை நாடுகளில் பெருமை சேர்த்ததும் சுவாமி விவேகானந்தர்தான். இந்திய ஆன்மிகத்தை விவேகானந்தருக்கு முன்பு, பின்பு என இரண்டு கட்டங்களாக பிரிக்கலாம்.

18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் தான் இந்தியாவுக்கு வந்து அவர்களது மதம் குறித்த தத்துவங்களைத் தெரிவித்து வந்தனர். ஆனால் உலகுக்கே ஆன்மிக ஒளியை பாய்ச்சி சகோதரத்துவத்தை உணரச் செய்தவர் விவேகானந்தர்.

இந்தியாவில் 15 வயது முதல் 30 வயது வரை 50 சதவீதம் பேர் உள்ளனர். இளைய தலைமுறையினரால் மாற்றத்தை உருவாக்க முடியும். நமது தாய்நாட்டில் மனிதர்களை உருவாக்கும் கல்வி வேண்டும். துறவிகளில் பெண்கல்வியை பற்றி பேசியவர். பெண்களை தனக்குச் சமமாக அமரவைத்து அவர்களின் ஆற்றல் வெளிவருவதற்குரிய தளத்தை உருவாக்கி கொடுத்தவர் விவேகானந்தர்.

ஆன்மிக உலகில் ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவர் விவேகானந்தர். 150 ஆண்டுகளை கடந்தும் உலகை வழிநடத்துபவர். இன்றும் தேவைப்படுபவர். 100 இளைஞர்களைக் கொடுங்கள், பாரதத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று சூளுரைத்த சுவாமி விவேகானந்தரை மாணவ, மாணவியர் படித்து தங்களையும், நாட்டையும் முன்னேற்றும் பணியில் ஈடுபட வேண்டும் என்றார்.

சுவாமி கமலாத்மானந்தர்: சுவாமி விவேகானந்தர் பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த 12 ஆண்டுகளாக தேசிய இளைஞர் தின விழா நடத்தப்படுகிறது. நமக்கெல்லாம் சத்தியம் என்றால் அரிச்ச
நினைவு வரும். தர்மம், வள்ளல் த
கொடை என்றால் கர்ணன் நினைவு
சத்யாகிரகம் என்றால் காந்திஜி நி
வரும். அதேபோல இளைஞர்
சிறந்த வழிகாட்டி யார் என்றால்
விவேகானந்தர் மட்டுமே நினைவுக்
கிறார்.

சுவாமி விவேகானந்தரையும், தே
றையும் தனித்தனியாகப் பிரிக்க முடி
இந்தியாவைப்பற்றித் தெரிந்து கொ
வேண்டுமென்றால் விவேகானந்
படிக்கவேண்டும் என்றார் கவிஞர் ர
நாத் தாகூர். மாணவர்கள் தங்களை
தங்களை தாங்களே அறிந்து கொ
வேண்டுமென்றாலும் கூட விவேக
ரைத் தான் படிக்க வேண்டும்.

விவேகானந்தரின் சீடர் நிவேதிதை
மியை அணுகி அவருக்கு சேவை
அனுமதிக்க வேண்டும் என்று
போது, சுவாமி விவேகானந்தர் நாட்
சேவை செய்வது தனக்கு சேவை செ

தேவை பதிவிறக்கம் அல்ல, பதிவேற்றம்!

மதுரை, ஜன23: வாசிப்பதும், நினைவாற்றலும்தான் இறைவன் மனிதனுக்கு அளித்த மிகப்பெரிய வரம். தேவையற்றவைகளை செல்லிடப்பேசியில் பதிவிறக்கம் செய்வதை விட்டுவிட்டு, தேவையானவற்றை மூளையில் மாணவர்கள் பதிவேற்றம் செய்துகொள்ள வேண்டும். தேவை, பதிவிறக்கம் அல்ல; பதிவேற்றம் என்று தினமணி ஆசிரியர் கி.வைத்தியநாதன் கூறினார்.

மதுரை ராமகிருஷ்ண மடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய இளைஞர் தின விழாவில் அவர் ஆற்றிய சிறப்புரை:

தினமணி ஆசிரியர்
கி.வைத்தியநாதன்

இந்தியாவின் இரு பெரும் தலைவர்கள் சுவாமி விவேகானந்தரை தங்களது மானசீக குருவாக ஏற்றுக் கொண்டனர். தனது அரசியல் பயணத்தை முதன் முதலாக கொல்கத்தாவில் தொடங்கிய சுபாஷ் சந்திரபோஸ், வீரத்தையும், தேசப்பற்றையும் கற்றுக் கொடுத்த பாடம் இதுதான். எத்தனையோ கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், அவற்றை ஏற்றுக் கொள்ளும் விசாலமான மனமும், பக்குவமும் உடையது எங்களது மதம். ஆகவே, நீங்கள் அனைவரும் எனது உறவுகள் என்றார்.

ஆயிரக்கணக்கான துறவிகள், ரிஷிகள் தவம் புரிந்த பெருமைக்குரிய பூமி நமது இந்திய தேசம். மற்ற துறவிகளில் இருந்து சுவாமி விவேகானந்தர் வித்தியாசப்படுகிறார்.

தங்களை உயர்த்திக் கொள்ள வேண்டும், தாங்கள் முக்தி பெற வேண்டும் என்று அவருக்கு முன்னால் வாழ்ந்த துறவிகளும் ஆனால், விவேகானந்தர் வழியில் செல்லாமல் கட்செவி அஞ்சல் (வாட்ஸ்ஆப்) வழியில் சென்று கொண்டிருக்கிறார்கள். நாம் ஒவ்வொரு நாளும் செல்லிடப்பேசியில் எவ்வளவு நேரத்தைச் செலவழிக்கிறோம். அதனால் என்ன பயன் கிடைக்கிறது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது நண்பர்களுக்குள் கலந்துரையாடல் இல்லை, ஒரே வீட்டில் அப்பா அம்மா, அண்ணன்-தங்கையிடம் கூட பேசுவதில்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது.

இறைவன் நமக்கு அளித்த மிகப்பெரிய வரம் வாசிப்பு. அதை ஒருபோதும் நிறுத்தி விடக் கூடாது. இளம் வயதில் தான் மனனம் செய்து நினைவாற்றலைப் பெருக்கிக் கொள்ள முடியும். நாற்பது வயதுக்கு மேல் மனனம் செய்வது கடினம். இப்போது நாம் செல்லிடப்பேசியில் தேவையற்ற பல

பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்
CIN : L29130TN1961PLC004466
(முரளிகிருஷ்ணா குழுமத்தின் ஒரு அங்கம்)
பதிவு அலுவலகம் : ஹுசூர் கார்டன்ஸ், செம்பியம், சென்னை - 600 011.
இணையம் : www.bimlip.co.in மின்னஞ்சல் : vidhyashankar@bimlip.co.in

அறிவிப்பு

டிசம்பர் 31, 2017 உடன் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிப்பதற்காக, ஏற்றுக் கொள்வதற்காக மற்றும் பதிவில் எடுத்துக் கொள்வதற்காக நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவின் கூட்டமானது 02.02.2018, வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்டிற்காக,
சென்னை
22.01.2018
கே. வித்யா சங்கர்
நிறுவனச் செயலாளர்

Chennai Petroleum Corporation Limited